# இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கான அர்ப்பணிப்பு ஜெபம்

*சிருஷ்டிகரும், சர்வவல்ல பிதாவுமாகிய ஒரே தேவனை நான் விசுவாசிக்கிறேன்.*

*"தெய்வங்கள்" என்று அழைக்கப்படும் கடவுள்களைப் புறக் கணிக்கிறேன்.*

*தேவனுக்கும் பிறருக்கும் விரோதமாக நான் பாவம் செய்ததை ஒத்துக்கொள்கிறேன். இதன்மூலம் நான் தேவனுக்குக் கீழ்ப் படியாமல், அவருக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் விரோ தமாகக் கலகம் செய்தேன்.*

*என் பாவங்களிலிருந்து என்னால் என்னைத் தப்புவிக்க முடி யாது.*

*கிறிஸ்துவாகிய இயேசுவே உயிரோடு எழுப்பப்பட்ட தேவ குமாரன் என்று விசுவாசிக்கிறேன். எனக்காக அவர் சிலுவை யில் மரித்து, என் பாவத்திற்கான நியாயத்தீர்ப்பை அவர் சுமந்தார். எனக்காக அவர் மரணத்திலிருந்து உயிரோடு எழுந் தார்.*

*நான் என்னுடைய பாவங்களிலிருந்து விலகுகிறேன்.*

*கிறிஸ்து சிலுவையில் வென்றுகொடுத்த பாவமன்னிப்பின் ஈவை அவரிடம் கேட்கிறேன்.*

*பாவமன்னிப்பின் ஈவை இப்போதே பெற்றுக்கொள்கிறேன்.*

*தேவனை என் பிதாவாக ஏற்றுக்கொள்ளவும், அவருக்கே சொந்த மாவதை விரும்பவும் இப்போதே தெரிந்துகொள்கிறேன்.*

*நித்திய ஜீவன் எனும் ஈவை நாடுகிறேன்.*

*என் வாழ்க்கை உரிமைகளை கிறிஸ்துவிடம் ஒப்படைத்து, இன்று முதல் அவரே என் வாழ்க்கையின் ஆண்டவராக ஆட்சி செய்யும் உரிமைகளை வழங்குகிறேன்.*

*அனைத்து ஆன்மீக மெய்ப்பற்றுகளையும் புறக்கணிக்கி றேன். குறிப்பாக ஷஹாதாவையும் என்மேல் அதற்குள்ள சகல உரிமைகளையும் புறக்கணிக்கிறேன்.*

*சாத்தானையும் சகல தீமைகளையும் புறக்கணிக்கிறேன். தீய ஆவிகளோடும் அல்லது தீய கொள்கைகளோடும் நான் செய்துகொண்ட அவபக்தியான சகல உடன்படிக்கைகளை யும் உடைத்துப்போடுகிறேன்.*

*என்மேல் அவபக்திக்கேதுவாக அதிகாரம் செலுத்துகிறவர் களோடு செய்துள்ள சகலவித அவபக்தியான பந்தங்களைப் புறக்கணிக்கிறேன்.*

*என் சார்பாக என் முன்னோர்கள் செய்த, என் வாழ்க்கையில் ஏதாவது வகையில் தாக்கத்தை ஏற்படுத்திய சகலவித அவ பக்தியான உடன்படிக்கைகளைப் புறக்கணிக்கிறேன்.*

*தேவனிடமிருந்து இயேசு கிறிஸ்துவின்மூலமாக வராத மனத் திறன்கள் அல்லது ஆவிக்குரிய திறன்கள் அனைத்தையும் புறக்கணிக்கிறேன்.*

*வாக்குரைக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் ஈவைக் கேட் கிறேன்.*

*பிதாவாகிய தேவனே, நான் உமக்கு, உமக்கு மட்டுமே மகிமை கொண்டுவரும்படிக்கு தயவுகூர்ந்து என்னை விடு வித்து, மாற்றியருளும்.*

*நான் உம்மை மகிமைப்படுத்தவும், பிறரை நேசிக்கவும் ஏது வாக ஆவியின் கனியை எனக்குள் தாரும்.*

*இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுக்காக நான் என்னைப் பரி சுத்தப்படுத்தி, அவரோடு என்னைப் பிணைக்கிறேன் என் பதை என்னைக் காண்கிற மனிதர்களுக்கு முன்பாகவும், சகல ஆன்மீக அதிகாரங்களுக்கு முன்பாகவும் அறிவிக்கிறேன்.*

*நான் பரலோகத்தின் பிரஜை என்பதை அறிக்கையிடுகிறேன். தேவனே என்னைப் பாதுகாப்பவர். பரிசுத்த ஆவியின் உத வியால் இயேசு கிறிஸ்துவுக்கு என்னைக் கீழ்ப்படுத்தி, அவ ரைப் பின்பற்றவும், என் வாழ்நாள் முழுவதும் அவரை மட் டுமே பின்பற்றவும் தீர்மானிக்கிறேன்.*